**ஏப்ரல்**
**13**

# *புனித மார்ட்டின் (-655)*

இவர் 649-ல் பாப்புவானார். அப்பொழுது "நம் ஆண்டவராகிய இயேசுவிடம் தேவ மனது மட்டுமே உண்டு. மானிட மனது கிடையாது" என்ற பதிதக் கொள்கை பரவியிருந்தது. இதை இவர் கண்டித்தமையால் இவரைக் கொல்லும்படி பேரரசன் கட்டளையிட்டான். கொல்லும்படி பேரரசன் கட்டளையிட்டான். கொல்லும்படி சென்றவனது கண்கள் இரண்டும் குருடாயிற்று. இன்னொருவனை அடைத்தான். அங்கு அவரை ஓராண்டடு காலமாக நிந்தித்து உபாதைப்படுத்தினார். இன்னோர் இடத்திற்குப் கொண்டுபோய் மூன்று மாதமாக அவரை ஓர் இருண்ட சிறையில் அடைத்து வைத்திருந்தனர். தம்மை உபாதித்தவர்களுக்காக அவர் உருக்கமாக செபித்து வந்தார். பின்னர் வேறோர் இடத்திற்கு இவர் கடத்தப்பட்டார். அங்கு ஒரு கொடி பஞ்சம் ஏற்பட்டது. இவருடைய தேவ எஜமானரைப் போல இவரும் எல்லோராலும் கைவிடப்பட்டார். நண்பர்கள் இவரை மறந்தார்கள். சிலர் அவருக்கு உதவி செய்ய பயந்தார்கள். இவர் மிகுந்த உபாதைப்பட்டு இறந்தார்.

**சிந்தனை:**

தேவ ஊழியர்களை அவமதிக்கிறவர்களை கடவுள் இவ்வுலகில் கடுமையாகத் தண்டிப்பதை நாம் கண்கூடாய்ப் பார்த்து வருகிறோம். அப்படியிருந்தும் சிலர் இதை மறந்து செயலாற்றுகிறார்கள்.

**செபம்:**

ஆண்டவரே, வேத விரோதிகளின் உள்ளங்களில் தெய்வ பயத்தை உண்டாக்கும்.